113189

மூவலூர் ஸ்தல மகிமை

Q23:38 2M3m
N81
113189

154

உ

மூவலூர் ஸ்தல மகிமை

15/29

REGISTRAR OF BOOKS
APR 1951
MADRAS

வெளித்தோற்றம்

இயற்றியவர் :

திரு. T. H. விவேகானந்தம் பிள்ளை, B.A., L.T.,
(நிர்வாக அதிகாரி, திருவெண்காடு தேவஸ்தானம்)

Q23:38·2.1193

சுவாமி தேவஸ்தான வெளியீடு.

N51

1951

11348

உ

மூவலூர் ஸ்தல மகிமை

இயற்றியவர் :

திரு. T. H. விவேகானந்தம் பிள்ளை, B.A., L.T.,
(நிர்வாக அதிகாரி, திருவெண்காடு தேவஸ்தானம்)

ஸ்ரீ மார்க்கசகாய சுவாமி தேவஸ்தான வெளியீடு.

1951

113189

முகவுரை

மூவலூர் ஸ்தல மகிமை என்னும் இச்சிறு நூல், திருவெண்காடு தேவஸ்தானம் தற்கால நிர்வாக அதிகாரி திரு. T. H. விவேகானந்தம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டு சென்னை இந்துமத பரிபாலன போர்டார் அவர்களால் நெ. 1273 தேதி, 25-4-47 உத்திரவு மூலமாய் அங்கீகரிக்கப்பட்டு சென்னை கிரி பதிப்பகத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

S. வீழிநாதன்
நிர்வாக அதிகாரி
15-1-1951
மூவலூர்.

திரு. K. V. நாராயணசாமி முதலியார் அவர்கள், B. A.
திரு. A. S. முத்தையன் செட்டியார் அவர்கள்.
திரு. N. V. ரெத்தினசபாபதி பிள்ளை அவர்கள்,
டிரஸ்டிகள்.

MARGASAHAYESVARA TEMPLE INSCRIPTIONS.

Of the 15 inscriptions copied from the village Mūvalūr, all of them except one are engraved on the walls of the Mārgasahāyesvara temple and its *gopura*. Of these, four belong to the Chola kings, the earliest of whom referred to in these being Rājendra Chola, the son and successor of the great Rājarāja I, the author of the famous temple at Tanjore. His inscription (No. 5) dated in the 7th year of his reign (A. D. 1019) records an endowment by a resident of Kulaiūr of 130 *kāsu*, the interest on which was to be utilised for a perpetual lamp in the shrine of Kūttādudevar (Natarāja) in the temple. An inscription of Vikramachola dated in the 2nd year (A. D. 1120) of his reign (No. 8) is engraved on the door jamb of the treasure-room of the temple and refers to the fixing of the rate of taxes due on some *devadāna* lands belonging to the temple of Madhurāntaka-Vinnagar-Ālvār by the assembly of Madhurāntakachaturvedimangalam in Kurukkai-nādu, a subdivision of Virudarājabhayankara-valanādu. The remaining two Chola records *viz.*, Nos. 1 and 2 belong to Kulottunga III who commenced his reign in 1178 A.D. and are dated in his 11th (No. 2) and 15th (No. 1) regnal years. They are both fragmentary and mutilated, but from what is preserved of these inscriptions, it may be seen that the former, gives a list of articles, including ornaments, presented to the temple of Tirumūvalūr-Udaiya Nāyinār and the goddess by an individual named Selvappillaiyāndār and the latter refers to an agreement by the Siva-Brāhmanas of the temple to provide two perpetual lamps in the central shrine for an endowment of 100 *kāsu* received by them from an individual named Manrulāduvān Udayanjeydān.

Of the two Pāndya inscriptions, one belongs to the 6th regnal year of a Srivallabha (No. 3) and the other to the 34th regnal year of another king of the same name (viz., Srivallabha) who bears the epithets Māravarman, Tribhuvanachakravartin and Konerinmelkondān. All that could be said of these kings is that they are later Pāndyas who ruled over this tract during the 12-14th centuries A.D. Both the records refer to certain land grants made to the temple of Valittunai-Nāyanār at Mūvalūr which is stated, to be situated in Tiruvelundūr-nādu, a subdivision of Jayangondasolavalanādu. The former inscription also makes a reference to the gift of 2 plots of land to the same temple by a lady called Alli Arasāni of Tuppil.

The Vijayanagara kings are represented by two inscriptions, Nos. 4 and 8. No. 4 belongs to Virupanna Udaiyar, son of Harihara and is dated in Saka 1321 (=A.D. 1399) It confirms the right of the templeover the lands which belonged to it as well as those which belonged to the temple of Kālakūttar which had been destroyed by fire. The other inscription belongs to Achyutadeva-Mahārāja and registers some provisions made for the renewal of cake-offerings in the temple, by Meybhoga-Nāyakkar, son of Rāmappa-Nāyakkar.

Of the rest of the inscriptions, Nos. 10 and 11 belong to the Nāyaka chiefs of Tanjore, Sevvappa and Achyutappa, They register gifts of lands as *sarvamānya* to the temple. Nos. 12, 13 and 14 refer to a Chedi chieftain named Pillaipperumāl. He is called merely Chedirāja in No. 12 which is a *sloka* in Sanskrit written in Grantha characters. The next two extolling the chief for his liberality.

inscriptions which are in Tamil verse call him an ornament of Puduvai and Sadaiyappillai. The last inscription which is engraved on a stone set up in the village is also connected with the temple of Mārgasahāyesvara in that it refers to the grant to this temple, referred to in its vernacular name *viz.*, Valittunai-Nāyinār, the locality called Tiruppanippettai. Probably the income by way of taxes etc. from this locality was to be utilised for the repairs (Tiruppani) of the temple.

It is obvious from the above precis of the contents of the inscriptions in this temple, that the epigraphs do not throw any light as to the proable date of the foundation of this temple. Most of the epigraphs on the walls of the temple are mutilated and fragmentary and some of them are displaced-an unmistakable evidence that the temple must have undergone renovations sometime after the stones on its walls were engraved resulting in the misplacement of these engraved stones. All that could be said about the antiquity of the temple is that the epigraphs on its walls carry its date to as far back as the first quarter of the 10th century A. D.

INSCRIPTIONS IN THE MARGASAHAYESVARA TEMPLE

MUVALUR

Mayavaram Taluk, Tanjore District.

EDITED BY

H. K. NARASIMHASWAMY

(Senior Epigraphical Assistant, Office of the Govt. Epigraphist for India)

No. 1.

(A. R. No. 18 of 1925)

On The north wall of the Margasahayesvara temple

1 ஸ்வஸ்திஸ்ரீ [।।*] திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியன் முடித்தலை யுங் கொண்டருளிய சிகுலோத்துங்கசோழதேவற்கு [யாண்டு] [௰]௫-வது [மீந] மாதத்து உடையார் திருமூவலூருடைய நாயனாற்கு ஆண்டார் செல்வப் பிள்ளையாண்டார் மேற்படி ஆன பொன் அரமாலைக் கிட்ட பொற்பூ எட்டினால் பொன் இருகழஞ்சினஞ் [சு] மா மாற்றெட்டரை இவை கொத்த கம்பி ஆறி னால் செம்பு அறு பலம்

2 சாத்தின திருப்பட்டம் ஒன்றினால் பொன் பதின் கழஞ்செ பதினைஞ்சு மா மாற்று எட்டு முன்பு சாத்தியருளுகிற திருப்பட்டங்களுக்கு கொக்குவாய்க் கும் [படு]கண்ணுக்கும் இட்ட வெள்ளி ஐங்கழஞ்சு

அபிஷேகதெண்டி இடை அறுபத்எழு இட்டநாயகத் தளிகை இடை நாற்பத்தெழு துவாரவாசல்க்கு தாளும் சங்கிலிகையும் நூற்றுப்பலம் செல்வப்பிள்ளை ஆண்டார் அரிசிப்பிச்சை பணணிந திரைவி।

1 The Continuation is lost. Another fragmentary inscription on the same wall contains the following lines which seem to be connected with inscription No. 1 above:

1 செல்வப்பிள்ளையாண்[டார்] இட்ட நாரைக்கால் க-நால் இடை ஒன்றினால் நூற்றை-

2 ம்பதிந் பலம் திருநெற்றிபட்டம் க-க்கும் பிற்காறைக்கு இட்ட வெள்ளி மு .....

3 கு கழுஞ்சரை நாச்சியாற்கு அமுதுசெய இட்ட தளிகை க-நால்

4 இடை இருபதிந் பலம் [॥*]

No 2.

(A. R. No. 19 of 1925)

On the same wall

1 ஸ்வஸ்திஸ்ரீ [॥*] ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் பாணடியன முடித்தலையும் கொண்டருளிய குலோத்துங்கசோ[ழ]தேவற்கு யாண்டு பதிந் ஒன்றாவது மேஷநாயற்று அபர பக்ஷத்து ஏகாதெளி[யும்] வியாழக்.........* கொண்ட சோழவளநாட்டுத்

திருவழுந்தூர் நாட்டு உடையார் திருமுவலூருடையார் கோயில் ஐம்பது வட்டத்து சிவப்பிராமணக் காணி உடைய பாரதாயந் [தாதந்] சந்திரசெகரந் தம்பிராந் தொழுந்நாந இராஜராஜ பட்டநெநும் இக்கே———†

2 துணை பட்டநெநும் இவந் தம்பி சிவதவனப் பெருமானெநும் இவந் தம்பி பரமாற்பநெநும் இவந் தம்பி கூத்தாடி பட்டநெநும் இக் கொத்திரத்து எதிரிலி சொழபட்டந் மகந் திருமுவலூர்..........* காந உடையாநெநும் இக்கோத்திரத்து பெரியாந் அம்பலத்தாடியாந இஷபவாகன பட்டநெநும் இவந் தம்பி வன்நொர் பிராந்நெநும இக்கோத்திரத்து வாநவாச பட்டநெநும் இக்கோத்திரதது தழுவக்குழைஞ்ச——†

3 டாந் ஆண்டாந்நும் சொலைபுற்றுட.........ண்டாந் மகன் திருவாலந்துறை உடையாநெநும் இவந் தம்பி நிற்சங்கி ஆடுவாநெநும் இக்கோத்திரத்து......* குலொத்துங்க சொழபட்டநெநும் கெவுதவந் செல்வ கொதெவப் பெருமளாந குநிக்கும்பிராந்பட்டநெநும் திரிச்சிற்றம்பலம் முடையாநெநும் இவந் தம்பி குத்தநெநும் இக்கொத்திரத்து தில்லை———†

---

* The continuation is lost; but on a piece of slab built in between, the following lines are engraved:

1 ஸ்ரீராஜராஜ தெவற்(க்)கு யாண்டு ௰௫—

2 திருவெருந்தூர் நாட்டு அகரம் ந. சி—

3 ன்முதல் குறை சொல்லுகையால்—

4 குநூற்று நா[ர்*]ப்பத்து ஆறுமாவி........

---

† The continuation is lost.

4 நெநும் இவந்தம்பி திருவெகம்ப மட்டி......
நெந்நும் பெரியாடவந் திருக்காமி[ச்*]சிரம்முடை
யாந்நெந்நும் உ[ள்]இட்ட இ[வ்*]வனை வொமும் ஜயங்
கொண்டசொழவ.........யாந மனறுளாடுவாந் உதை
யஞ்செய்தாந் வ[ா]டா உபையமாக நாங்கள்
இசைந்து கல்வெட்டிக்குடுத்த பரிசாவிது இவந் இந்
நாயநாற்கு இரண்டு .....ஒரு குத்து விளக்
கும் இதில் மெல்நிலையில்லெ ஒரு திருநுந்———†

5 இவன் இக்கொயிலில் திருமுன்நெ வைத்த
திருக்குத்திவிள[க்]கிலெ மெல்நிலை இ[டை]
இவநுக்கு ஆக நா.........[நந்தாவிளக்கு எரிக்க
கடவெ]........திராதித்தவரை எரிக்கக்கடவொமாக
இவனுடன் உபையமாக நாங்கள் கைக்கொண்ட . .
[ள இக்காசு நு]........சில பொலிசைக்கு பகலும்
இரவும் திருவு[ண்]ணாழிகைக்குள்ளெ இக்குத்திவி
———†

6 கடவகள் ஆகவும் இப்படி இசைந்து இவ்வு
பையம் ஆய் இக்காசு கைக்கொண்டு இப்படி
கல்வெ............

No. 3.

(A. R. No. 20 of 1925.)

On the same wall

1 ஸ்ரீ[॥*]ஸ்ரீவஜ்ஜ தெவ[ர்*]க்கு யாண்டுசு [1]வது
ஸவாஷஸக்ஷத்து வெள்ளிக்கிழமை சதையத்துநாள்
ஜயங்கொண்ட சொ[ழவள]நாட்டு திருமுவலூரு
டைய நாயிநார் வழித்துணை நாயிநார் [1]ஆதிசண்டெஸ்வ
ரதெவர்க்கு அகர

† The continuation is lost.

1 Represented by a symbol.

2 ம் ஸ்ரீநகரி ஸ[து*]ர்வெதிமங்கலத்து ஸபை
யொரில் உறுப்புட்டூர் ஸ்ரீகுமாரபட்டன் பக்[கல்]
கொண்டுடைமையன் இவ்வகரப்பிடாகை முவலூர்
பவித்ரமாணிக்கவதிக்கு மெற்க்கு தில்

3 லைவிடங்கன் வா[ய்*]க்காலான பல்லவரா
யன் வாய்க்காலுக்கு வடக்கு க சதிரத்து ச கூ . .
பெர் கூவப்பட்ட[து]ண்டு உள்ப்பட தடி உ நால்
துரவு சிர்குழி உள்பட மனை இருப்பும் கொல்லை

4 ப் பரப்பும் பருவரம்பும் அகப்பட திரு
நாமத்து காணி ஆக இற்றைநாள் கொண்டுடைமை
ஆன நிலம்...மாகாணியும் இதன் கிழக்கு தூப்பில்
அல்லியரச்சாணி உதகபூர்வமாக தந்த பட்டப் பாழ்
கண

5 க்கு எழாவது துல[ா*] நாயற்[று]அபர
பக்ஷத்து ஷஷ்டியும் வெள்ளிக்கிழமை திருவெ[ா*]
ணத்து நாள் இன்றட்டு இவ்வகரத்தில் ஸபை[1]

6 அகரபிடாகை முவலூ[ர*]ான பவித்திர
மாணிக்கவதிக்கு மெற்க்கு தில்லைவிடங்கன் வாய்[க்*]
காலுக்கு வடக்கு ககூ க சதிரம் கிழக்கு—

7 யும் திடாரும் துரவும் பரு[வு]ம் அகப்பட
கொண்டுடைமை ஆன நிலம் ரூ-இ நிலம் அரையும்
இங்கு விட்டு கிழக்கு பவித்ரமா—

8 மெக்கடைய தூப்பில் [அ]ல்லியரச்சாணி
உதகபூர்வமாக தந்த நெடுங்கண் என்று பெயர்
கூவப்பட்ட தடி உ-னால் பெருவரம்பு—

9 றுப்புட்டூர் குமாரபட்டன் எழுத்து இப்ப
டிக்கு இவை காக்கண்டூர் அழகிய மணவாளபட்டன்—[1]

1 The continuation is lost.

No. 4.

(A. R. No. 21 of 1925)

On the north and west walls of the central shrine in the same temple

1 ஸ்வஸ்தி [॥*] ஸ்ரீமந்மஹாமண்டலேஸ்வரந் ஹரிராய விபாடந் பாஷைக்கு-

2 தப்புவராயர்கண்டந் மூவராயரகண்டன் ஸ்ரீ வீரஹரி[ரா]-

3 யகுமாரர் ஸ்ரீவீரவிருப்பண்ண உடையர் ப்ருதிவீ ராஜ்யம் பண்-

4 ணி அருளாநின்ற சகாப்தம் ௲௩௱௨௰௧ன் மேல் ப்ரமாதி வரு-

5 ஷம் துலாநாயற்று அபரபக்ஷத்து ஏகாதசியும் வியாழக்கிழ-

6 மையும் பெற்ற அவிட்டத்து நாள் ஜயங்கொண்ட சொழவளநாட்டு-

7 திருவழுந்தூர் நாட்டு திருமுவலூருடையார் வழித்துணை நாயனு-

8 ர் ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு இன்னாட்டு அகரம் ஆனைமேல் அகர-

9 ம் ஆன ஸ்ரீ நமரீஸ்வரச்சதுர்வேதிமங்கலத்து ஸபையாரோம் இன்-

10 னுயனுர்க்கு மூவலூரில் பழந்திருநாமத்துக் காணி ஆக கலவெட்-

11 டுப்படி உள்ளநிலத்துக்கும் பின்பு பலர் பக்கலிலும் நாளதுவரை-

12 யும் கொண்ட ப்ரமாணப்படி நிலத்துக்கும் காலகூதர் தீபிடித்து கா-

13 லம் சென்ற நிலத்துக்கும் எல்லை ஆவது[।*] தில்லைவிடங்க வாய்க்-

14 கால் ஆன பல்லவராயன் ஆற்றுக்கு வடக்கு திருச்சிற்றம்பலவாய்-

15 க்காலுக்கு தெற்கு முழுதும்வல்லான் கண்ணுற்றுக்கு மேற்கு கணமா-

16 ஞ்செரிக்கண்ணுற்றுக்கு கிழக்கு இன்னுன் கெல்லைக்குள்பட்ட நில .

17 த்தில் கண்மாஞ்செரிக் கண்ணுற்றுக்கு கிழக்கு இரண்டாங் கட்டளை த-

18 டி ஒன்றும் மூன்ருங் கட்டளை தடி ஒன்றும் ஆக தடி இரண்டினுல் நில-

19 ம் முக்காலும் நீக்கி நிலம் ம௧வ - இதுவும் முழுதும் வல்லான் கண்ணு-

20 ற்றுக்கு கிழக்கு தில்லைவிடங்கவாய்க்காலுக்கு வடக்கு இரண்ட-

21 ாங்கண்ணு[ற்*]று நெடுங்கண்தடி இரண்டினுல் [ந]ங்கல் உட்பட நில-

22 ம் ரு-ஆக நிலம் மகூஜ இதில் உடையார் திருவாத்தீஸ்வரமுடையார்-

23 திருநாமத்துக்காணி ஆன முள்ளிசெய்தடி இரண்டிரு-

24 ல் நீ ரு நீக்கி யகுவ ஆக நிலம் பாகஜ இன்னிலம் பதி-

25 ன் ஒன்றெமுக்காலும் திருநாமத்துக்காணி ஆக சந்திராதி-

26 த்திவரையும் செல்ல இப்படிக்கு இவை கொமடத்து யஜ்ஞூ.

27 ஸஹட்டந் எழுத்து இவை மூப்புறத்து நாராயண[ஹ]

28 ட்டன் எழுத்து இவை கொமடத்து தியாக விஜெதபட்ட-

29 ன் எழுத்து இப்படிக்கு இவை உறுப்புட் டூர் நித்தியானந்த-

30 பட்டன் எழுத்து இப்படிக்கு இவை நாலூர் எஜ்ஞு முத்திபட்டன-

31 எழுத்து இப்படிக்கு இவை வங்கிப்புறத்து ஸ்ரீகரக்ஷ்ணபட்-

32. டன் எழுத்து

புன்னைகேசவரரை, ருத்ரன், அயன் அரி, மலரும் பூஜிக்கல்.

னுக்கு ஞானோபதேசஞ் செய்தருளினார். ஞானோதயமான உடன் காமம் ஒழிந்தது. மாமரத்தடியில் விளங்கும் மகாலிங்கத்தை அம்மையார் பூஜித்தார். உடனே பூரண பெண் வடிவு பெற்றாள். கணப்பொழுதில் வழித்துணை நாதரும் மறைந்தருளினார்.

மயிலால் பூஜிக்கப்பட்ட மகாலிங்கேசுவரர் ஸ்ரீ மாயூர நாதர் எனப் பெயர்பெற்றார். அத்தலமும் மாயூரம் எனப் பெயர் பெற்றது. மயில் வடிவுகொண்ட அம்மைக்கு 'அபயம் பாள்' அல்லது 'அஞ்சல் நாயகி' எனப் பெயர் பொருந்தியது. ஸ்ரீ மாயூரநாதரும், ஸ்ரீ அபயம்பாளைத் திருமணம் செய்து கொண்டார்.

திருவிளையாடல்களினின்றும் ததும்பும் தத்துவங்கள்:-

ஸ்ரீ மார்க்கசகாயேஸ்வரரது திருவிளையாடல்களினின்று தத்துவங்கள் சில தென்படுகின்றன. அவைகள் எக்காலத்தும் எல்லோர்க்கும் பயன்படுபவைகளாம். முயற்சியால் மனிதன் மேன்மையடையக் கூடுமெனினும், கருமத்துக்குத்தானே கர்த்தாவென்று அவன் அகங்கரிக்கலாகாது. கடவுள் ஒருவரே கர்த்தா. அதை மறந்து, கடவுளிடத்தில் மங்கள் அனைத்துக்கும் கர்த்தா, அதை மறந்து, கடவுளிடத்திருந்து கர்மத்தைப் பிரிக்குமளவு மனிதன் கேட்டை வளர்க்கிறான். திரிபுரத்தை அழிக்க சிவபெருமான் வில் வளைத்துப் பாணம் பிரயோகஞ் செய்யத் துவங்கினார். அவ்வமயம் போர்க் கருவிகளாக விருந்த தேவர்கள். தம்மாலேதான் திரிபுர சம்காரம் நிகழ்வதாக எண்ணி அகந்தையடைந்தனர். அதன் முடிவு என்ன? இநுமாப்புகொண்ட அத்தனை பேரும் வெந்து சாம்பலாயினர். தெய்வத்தைப் புறக்கணித்துச் செய்கின்ற செயல்களெல்லாம் தனக்கே கேடாய் முடியும்: வித்யுன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன், மகிஷாசுரன் ஆகியோர்களின் வீழ்ச்சியே இதற்குத் தக்க சான்றாகும்.

ஒன்று என்ற இலக்கம் இருந்தால்தான், அவ்விலக்கத்தின் பின்பு போடப்படும் பூஜ்யங்களுக்கு மதிப்பு ஏற்படும். தனிப்பட்ட பூஜ்யங்களுக்கு மதிப்பில்லை. அதேபோல் தெய்வத்தை இணைத்துச் செய்கின்ற செயல்களுக்கெல்லாம்

தனிச் சிறப்புண்டு. தெய்வத்தைப் புறக்கணித்துச் செய்கின்ற செயல்களெல்லாம் தனக்கே கேடாய் முடியும். நினைத்த இடங்களுக்கு கணப்பொழுதில் செல்லக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்த திரிபுரர்களின் கதிஎன்னவாயிற்று? தெய்வத்தைப் புறக்கணித்த மகிஷாசுரனின் மாபெரும் வலிமை மண்ணைக் கவ்வியது.

உலகத்தில் கேடுகள் பல தென்படுவது வெளிப்படை. ஆனால் உலகத்தை கடவுளோடு இணைத்துப் பார்ப்பவர்களுக்கு தீமைகளெல்லாம் நன்மைகளாக வடிவெடுத்து விடுகின்றன. பாருலகிலுள்ள பொல்லாங்கைப் போக்குவதற்கு கடவுளை அடைதல் ஒன்றே உற்ற உபாயம். முன் கதைகளில் கூறப்பட்ட அமரர்களின் இன்னல்களை, அபயம் அடைந்த உடன் களைந்தருளினார் எம்பெருமானார். கட்டுக் கடங்காத மனதே பலபேரை அழித்து விடுகிறது. அத்தகைய மனதை சிவனிடம் சேர்த்துவிட்டால் அதனால் நன்மை பயக்குமே ஒழிய கேடு ஒன்றும் விளையாது, ஆகவே, வழிகாட்டி வள்ளலையும், அழகிய நாயகியம்மையையும் போற்றுபவர் பரத்தைச் சாரத்தகுதியுடையவர் ஆகின்றனர்.

சைவ சமயக் குரவர்களின் பாடல்கள்:

சைவ சமயக்குரவர்களுள், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோரும், பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழாரும் இத் தலத்தின் மகிமையைப் பற்றி பாடியிருக்கின்றனர் தேவாரம் என்னும் திராவிட வேதத்தை திருவாய் மலர்ந்தருளிய மூவராலும், ஸ்ரீ மார்க்க சகாயேசுவரர் பாராட்டப்படுகிறார் எனினும், தனிப்பதிகம் மட்டுமில்லை. 'பூவனூர்' திருப்பதிகத்தில் ஒரு பாடலும் 'திருநெய்த்தானம் திருத்தாண்டகத்தில்' ஒரு பாடலும், ஆக, இரு பாடல்களில் திருநாவுக்கர்சர் ஸ்ரீ மார்க்க சகாயேசுவரரைப் போற்றுகிறார், அவை பின் வருமாறு:-

(1) "பூவனூர், தண்புறம்பயம், பூம்பொழில்
நாவலூர், நள்ளாறொடு நன்னிலம்,
கோவலூர், குடவாயில், கொடுமுடி,
மூவலூர், முக்கண்ணனூர் காண்மினே"

(இதன் பொருள்)' குளிர்ச்சியும் அழகும் பொருந்திய, சோலைகள் நிறம்பிய பூவனூர், புறம்பயம், நாவலூர், நள்ளாறு, நன்னிலம், கோவலூர், குடவாயில், கொடுமுடி, மூவலூர், ஆகிய சிவஸ்தலங்களில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை கண்டு தெரிசியுங்கள்"

2. தந்தைதாயில்லாதாய் நீயேயென்றும் தலையார் கைலாய நீயேயென்றும்
எந்தாயெம்பிரானாய் நீயேயென்றும் ஏகம்பத்தென்னீசநீயேயென்றும்,
முந்திய முக்கண்ணாய் நீயேயென்றும் மூவலூர்மேவினாய்நீயேயென்றும்,
சிந்தையாய் தேனூராய் நியேயென்றும் நின்றநெய்த்தானாவென் நெஞ்சுளாயே.

(இதன் பொருள்)" தந்தை தாய் அற்றவனும், தலைமை பொருந்திய கைலைவாசனும், என் தந்தை, என்பிரான், ஆனவனும், காஞ்சிபுரத்தில் விளங்கும் என் ஈசனும், முக்கண் எம்மானும், மூவலூரில் தோன்றியுள்ளவனும், அடியவர் சிந்தையிலிருப்பவனும், தேனூரில் இலங்கும் தன்மையுடையவனும் ஆகிய எல்லாம் நீயே, நெய்த்தானத்துறை நாதனே! என்னெஞ்சுளாயே"

திருஞானசம்பந்தர், திருவாவடுதுறை கோமுகதீஸ்வரரைத் தரிசித்துவிட்டு, முத்துச்சிவிகையில் "திருத்துருத்தி" என்னும் தலத்திற்கு வந்து. சிவபெருமானை தரிசித்து, 'மாற்றுயர்பசும்பொன்' என்னும் பதிகம்பாடி, இறைவனை வணங்கிவிட்டு, காவிரிக்கரைமீதுள்ள மூவலூர் முக்கண்ணரை மனமார பூஜித்தார். இவ்வாறு சம்பந்தர், வழிகாட்டிவள்ளலாரை வழிபட்ட விந்தையை, சேக்கிழார் பெரியபுராணத்தில் பின்வரும் பாடலால் விளக்கியிருக்கிறார்.

"திரைத்தடம்புனல் பொன்னிசூழ் திருத்துருத்தியினில்
வரைத்தலைப் பசும்பொன்னெனும் வண்டமிழ்ப் பதிகம்
உரைத்து மெய்யுறப்பணிந்து, போந்துலவுமன்னதியின்
கரைகள் மூவலூர் கண்ணுதலார் கழல்பணிந்தார்"

'திருத்துருத்தி' என்பது குற்றாலம் இத்தலம் சோணாட்டில் காவேரிநதிக்கு தென்பால் அமைந்துள்ளது. குத்தாலேஸ்வரரை சேவித்துவிட்டு பின்னர் மூவலூர் முக்கண்ணனை அருகில் சென்று சேவிக்க, சம்பந்தர் விருப்புற்றாராம். மேற்றிசையை நோக்கி, பயணமாகி, சித்தாரண்யத்தின் மேற்கு எல்லையை அடைந்தார். அங்கு மணலெல்லாம் லிங்கமாக, அனந்த கோடிலிங்காகாரமாய் எங்கும் விளங்கின. இதற்கப்பால் அடியெடுத்துவைக்க ,அஞ்சி, இருந்தவிடத்தேயிருந்துபாடி, ஸ்ரீ மார்க்கசகாயேசுவரரைத் தொழுதுவிட்டு, தனது பெயராலேயே, சித்தர்காட்டில் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்துவிட்டு, அருகிலுள்ள வாவியில் மூழ்கிவிட்டு, மகாலிங்கப்பெருமானை அருச்சித்துவிட்டு, தடாகங்கள் நிறைந்த மயிலாடுதுறைக்கு வந்து சேர்ந்தார் சம்பந்தர்.

இதனை,

மூவலூருறை முதல்வரைப் பரவியமொழியால்
மேவுகாதலில் ஏத்தியே விருப்பொடும் போந்து
பூவலம் புதண்பணைப் புகலியர் தலைவர்
வாவிசூழ் மயிலாடுதுறையில் வந்தார்.''

என்ற பாடலால் சேக்கிழார் பெருமான் விளக்கியிருக்கிறார்.

எங்கும் நிறைந்துள்ள, பேர்ஊர் இல்லாப்பெம்மான் க்ஷேத்திரத்துக்கு ஏற்ப ஒரு தனிப் பெயரைப் பெற்றுக் கொள்கிறான் என்றும், அது பெரிதும் காரணப் பெயராகவே வந்தமையும் என்று மீண்டும் குறிப்பிடத்தக்கது. ஒரு தலத்தில் ஒரு மூர்த்தியை தரிசிக்கும்போது, வேறொரு தலமூர்த்தியைக் குறிப்பிட்டு வாழ்த்துவது பக்த கவிகள் சம்பிரதாயம். இதற்கிணங்க, சுந்தரமூர்த்தி நாயனார் மூவலூர் முக்கண்ணனை வருணித்து, திருவாவடுதுறைத் திருப்பதிகத்திலே ஒரு பாடலில் பாடியிருக்கிறார். அது பின்வருமாறு;-

வானநாடனே! வழித்துணைமருந்தே!
மாசிலாமணியே! மறைபொருளே!
ஏனமாம்எயிறு ஆமையும் என்பும்
ஈடுதாங்கிய மார்புடையானே!
தேனெய், பால்தயிர் ஆட்டுகந்தானே!
தேவனே! திருவாவடுதுறையுள்
ஆனையே! எனை அஞ்சல் என்றருளாய்
யாரெனக்கு உறவு அமரர்களேறே!

வழிதவறியவர்களுக்கு வழிகாட்டி சகாயம் புரிந்த மூவலூர் பிரானுக்கு ஏற்பட்டுள்ள திருநாமம் ''ஸ்ரீமார்க்கசகாயேசுவரர்' என்பது சிறந்த தமிழில் சொல்லுங்கால் ''வழித்துணைநாதர்'' அல்லது 'வழித்துணையப்பர்' என்று சொல்லலாம். மார்க்கம்—வழி. சகாயம்—துணை; ஈஸ்வரர்—நாதன் அல்லது அப்பன் என்பது தெள்ளிய பதஉரை. வழி தவறிவிட்டவர்களுக்கும், வழி தெரியாதவர்கட்கும் 'திகைப்பு ' என்னும் பிணி உண்டாகிறது. அப் பிணிக்கு இறைவன் 'துணை' என்னும் மருந்தை அளித்து பிணி நீக்குகிறான். ஆகவே ஈஸ்வரனுக்கு 'வழித்துணை மருந்து' என்ற நாமம் பொதுவாக பொருந்தி யிருப்பினும், புன்னாகவனேசுவரரின் திருவிளையாடல்களையொட்டி மூவலூர் பிரானுக்கு இப் பெயர் சிறப்பாக அமைகிறது. ஆக நம்பியாரூரர், மாசிலாமணியாய் விளங்கும், திருவாவடுதுறைப் பிரானை துதிக்கும்போது, மூவலூர் முக்கண்ணனின் திருவிளையாடல்களை நினைந்து, அப்பாடலில் அவனை 'வழித்துணை மருந்தே' என்றழைத்து உருகுகிறார்,

தீர்த்தங்கள்:-

புன்னாகவன க்ஷேத்திரத்தில் இலங்கும் புண்ணிய தீர்த்தங்கள் நான்கு. அவைகளில் நதி ஒன்று, புஷ்கரணி (பூங்குளம்) இரண்டு, கிணறு ஒன்று காவிரிநதி, துர்க்கா புஷ்கரணி, சந்திரபுஷ்கரணி, உபமன்யுகூவம் என்பன. காவிரி நதிக்கரையிலுள்ள தீர்த்தக்கட்டத்திற்கு 'பிப்பலர் தீர்த்தக்கட்டம்' எனப்பெயர்.

இத் தீர்த்தங்களின் மகிமைகளைச் சிறிது ஆராய்வோம்:-

1. பிப்பலர் தீர்த்தக்கட்டப் பெருமை:-

ரோகி, யோகியான விந்தை.

குடகுமலைச் சாரலில் அங்கமெல்லாம் குறைந்து, அழுகி துர்நாற்றம் வீசி, சீழ்வடிய, புழுக்கள் சொரிய, வெகு சிரமப்பட்டுக் கொண்டிருந்தான் குஷ்டரோகி ஒருவன். ஒரு சமயம் தெய்வீககான ஒலி இவன் செவிக்கெட்டியது. இம் மதுர ஒலி இவனை மகிழ்வித்தது. சற்று தூரத்தில் மாமுனிவர் ஒருவர் வீணையை மீட்டி இனிமையாகப் பாடிக் கொண்டிருப்பதை ரோகி கண்டான்.

ரோகி முனிபுங்கவரை அணுகி, வணங்கி, தான் செய்த அடாத செயல்களை எடுத்துச் சொல்லி, மனம் நொந்து, அடிபணிந்து நின்றான். இளம்பிராயத்தில், இம்மலைக் காடுகளில் பதுங்கியிருந்து, வழிப்போக்கர்களையும் நிரபராதிகளையும் வழிமறித்து, கொலைபுரிந்து, கொள்ளையடித்து வாழ்க்கையை நடத்தியதின் பயனாக குஷ்டரோகியானான்.

மதுரகானம் சுரந்த முனிவர் நாரதர், ரோகியின் உண்மையான மனக் கசிவுக்கிரங்கி, ஒரு மந்திரத்தை உபதேசித்து மறைந்துவிட்டார். ரோகி, மந்திரத்தை மனம் உருகி ஜபிக்கவே, ஸ்ரீமந்நாராயணமூர்த்தி இவன் முன்பு காட்சியளித்தார். ரோகியும் மனம் கசிந்து கதறினான். தான் புரிந்த அடாத செயல்களுக்காக மனவேதனை கொண்டு நொந்து கொண்டான். பரந்தாமன் பாவிக்கிரங்கி, இவன் செய்த கோடிக் கணக்கான பாவங்கள் நீங்கி நோய்தீர காவிரி நதியில் உள்ள ஒவ்வொரு தீர்த்தக்கட்டத்திலும் மூழ்கிக்கொண்டே சென்றால், எந்த தீர்த்தக்கட்டத்தில் உடற்பிணி நீங்குகிறதோ, அத்தலமே அவனது வாழ்விற்குகந்த தலமென்றும், அங்குதான் பாபவிமோசனமடைந்து முக்தி பெறுவானென்றும் திருவாய்மலர்ந்தருளினார்.

"சுவாமி! அடியேனது பாவங்களும் பிணியும் எந்ததீரத்தில் நிவர்த்தியாகின்றனவோ அங்கு தேவரீர் திவ்விய தரிசனம் தரலாகவேண்டும்," என்று ரோகி விண்ணப்பிக்க, சுவாமியானவர் "பக்தா! தீர்த்தத்தில் முழுகி, நின் பிணி ஒழிந்தபின் வடதிசையை நோக்கினால் நம் விஸ்வரூபதரிசனம் நினக்கு கிட்டும்" எனத் திருவாய்மலர்ந்தருளி மறைந்தார்.

முகுந்தன் மொழிந்தருளிய வண்ணம் நோயாளி, பொன்னி நதி தீர்த்தக்கட்டங்களில் முறையாக மூழ்கிக்கொண்டே வந்தான். பொன்னுலக மூர்த்தி புவியினில் வழித்துணை வள்ளலெனத் திருநாமம் பூண்டு, கோவில்கொண்டிருக்கும் மூவலூரில் பாயும் பொன்னி நதி கட்டத்தில் ரோகி நீராடியமாத்திரத்தில் அவனது புண்மேனி பொன்மேனியாகி, யோகியாக மாறிவிட்டார். உடனே வட திசையை நோக்கி வழிபடவே, விண்ணும் மண்ணும் நிறைய முகில் வண்ணன் திவ்விய தரிசனம்தரலானார்.

கேசவன், முனிவரை நோக்கி, "பக்தா! புன்னாக வனத்திலே பொன்னி நதியிலே நீராடி, நிர்மலராகிய உம்மை இனி 'பிப்பலர்' என யாவரும் அழைக்கட்டும், நீர் நீராடிய ஸ்நானக் கட்டத்திற்கு உமது நாமமே பொருந்தக்கடவது. தீராத உடற்பிணியையும் பாவப்பிணியையும் தீர்த்த இப் பொன்னி ஸ்நானக்கட்டத்தில் இனி முழுகுபவரின் மெய்ப்பிணி, பாபப்பிணி பிறவிப்பிணி ஆகிய இம் மூன்று பிணிகளும் நீங்கக் கடவது. நீர் புன்னாகவனேசுவரரை வழிபட்டு முக்தி பெறுவீராக" என அநுக்கிரகம் செய்து மறைந்தருளினார்.

பிப்பல முனிவரும் காசியிலிருந்து மகாலிங்கம் கொணர்ந்து இத்தலத்தே பிரதிஷ்டை செய்து காசிநாதரையும் புன்னைவனநாதரையும் ஆராதித்து ஆண்டவருடன் ஐக்கியமானார்.

இப்பொழுது மூவலூருக்கு வடக்கேயுள்ள "கோழ்குத்தி" என்னும் கிராமம்வரை அக்காலத்தில் பொன்னி ஆறு அகன்

டிருந்தது. பிப்பலரின்கோடி ஹத்திகளையும் நிவாரணம் செய்த தலத்துக்கு; 'கோடிஹத்தி' என்ற பெயர் வழங்கலாயிற்று. காலடைவில் 'கோடிஹத்தி' 'கோழ்குத்தி' எனத்திரிந்தது. இத்தலத்தே விஸ்வரூபம் காட்டியருளிய மாதவனுக்கு கோவில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அங்கு கோவில் கொண்டிருக்கும் பெருமானுக்கு 'வானளாவிய பெருமான்' என்பது திருநாமம். வழக்கில் 'வானமுட்டிய பெருமாள்' என்று சொல்லப்பட்டுவருகிறது.

2. சந்திர புஷ்கரணி.

நவக்கிரகமூர்த்திகளில் ஒருவரான சந்திரன் புன்னுகவன க்ஷேத்திரத்துக்குக் கீழ்பால் உள்ள திருக்குளத்தில் ஸ்நானம் செய்து, வழிகாட்டி வள்ளலாரைப் பூஜித்து இஷ்டசித்தி பெற்ருர் இத் தீர்த்தம். ஸ்ரீ மார்க்கசகாயேசுவரர் கோவிலுக்கு கிழக்கேயுள்ள, ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்திற்கெதிரேயுள்ளது.

3, துர்க்கா புஷ்கரணி.

அகோர வடிவுபெற்றிருந்த துர்க்கை, இவ் வாவியில் மூழ்கி அழகிய வடிவுபெற்ருள் என்றவிபரம் முன்பேகூறப்பட்டுள்ளது

4 உபமன்யு கூவம்.

இத் தீர்த்தம் கோவிலுக்குள் இரண்டாம் பிரகாரத்தில் ஏற்பட்டுள்ள கிணறு. உபமன்யு' என்னும் முனிவர் தலயாத்திரை புரிந்துகொண்டே இத் தலத்திற்கு வந்தார். அப்பொழுது எங்குமே ஜலமின்றி வரண்டிருந்தது. முக்தியளிக்கும் முக்கண்ணரை நினைத்தார். அவரருளால் ஓர் தீர்த்தம் உண்டாயிற்று அதில் நீராடி எம்பிரானை வழிபட்டார் உபமன்யு முனிவருக்காக ஏற்பட்ட தீர்த்தம் அவர் பெயராலே வழங்கிவருகிறது. இத் தீர்த்தம் காலத்தால் யாவற்றிற்கும் முந்தியது தெய்வீகமும் தூய்மையும் பொருந்தியது.

வழி பட்டோர்கள்.

வழிகாட்டி வள்ளலைவழிப்பட்டு நற்கதி பெற்ருேர்களின் சங்கியை கணக்கற்றதாயினும், சில சிரேஷ்ட பக்தர்களின் வழிபாடு மகிமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சர்ப்பம் பூஜித்தல்.

'காசியர்' என்னும் முனிவருக்கு 'கத்ரு' என்பவளிடமிருந்து நவநாகங்கள்பிறந்தன. 'அனந்தன்' 'கார்க்கோடகன்' 'தக்ஷன்'; 'சங்கபாலன், 'குளிகன்' 'பதுமன்' 'மகா பதுமன்' 'வாசுகி', 'சேடன்' என்னும் நாகர்கள் ஒன்பது பேரும் பாதாளம்புகுந்து தங்களில் முதல்வனுன' அனந்தன் என்னும் ஆதிசேடனை அரசனுகக்கொண்டு வாழ்ந்து வந்தனர்' இந்த ஒன்பதின்மரில் 'தக்ஷன்' என்பவன் மகாசிவராத்திரியன்று முதல் யாமத்தில் திருக்குடந்தை நாகேஸ்வரரையும். இரண்டாம்யாமத்தில் திருநாகேஸ்வரம் நாகேஸ்வரரையும், மூன்ரும்யாமத்தில் கஞ்சனூர் அக்கினியேஸ்வரரையும் நான் காம் யாமத்தில் புன்னுகவனேசுவரரையும் வழிபட்டு பேறு பெற்ருன்,

இன்னும் கார்த்திகை சோமவாரத்தில். 'வாசுகி', முதல் யாமத்தில் குடந்தை நாகேஸ்வரரையும். இரண்டாம் யாமத்தில் குடந்தை சமிவனேசுரரையும் மூன்ரும் யாமத்தில் ஸ்ரீ புன்னுகவனநாதரையும் பூஜித்து நான்காம்யாமத்தில் பாதாளம் புகுந்து இம் மூவரையும் நினைத்து முக்தி பெற்றதாகவும் ஒரு வரலாறு உண்டு.

சப்த மாதர்கள் பூஜித்தல்;-

'மகேஸ்வரி', 'கௌமாரி', 'சாமுண்டி' 'வைஷ்ணவி' 'பிர்மாஹி', 'வராகி', 'இந்திராணி' என்னும் சப்தமாதர்களும் ரத சப்தமியன்று வழித்துணை நாதனை வழிபட்டு இஷ்ட வரம் பெற்றனராம். இதற்காதாரமாக, இவ் வாலயத்தில் அம்மன் சந்நிதிக்கு மேல்புரமாக, வடக்கு பார்க்க, சப்தமாதர்களுடைய பிரதிஷ்டைகளும் அமைக்கப்பட்டு நித்யபூஜை செய்யப்பட்டு வருகிறது.

கர்மசேனு தியர்வழிபடல்;-

முன்னொருகாலத்தில் கர்மசேனன் என்னும் நாஸ்திகன் ஒருவன் சோழநாட்டை ஆண்டுவந்தான். ஒருநாள் சில முனிவர்கள் இவனது சபையை நண்ணினர். ஆஸ்திகர்களை குதூகலிக்கச் செய்த முனிவர்கள் நாஸ்திக மன்னனின் மனப் பான்மையை திருப்பமுடியவில்லை. ஆதலால் முனிவர்கள் அரசனை நோக்கி, "அரசே! முத்தியளிக்கும் மூவலூர் மேவிய மார்க்கசகாயேசுவரரை ஒருமுறை சேவித்துவிட்டு வாரும். உம் பாபங்கள் விலகும்" என்றனர்.

சிலகாலம் சென்றது அயல்நாட்டரசன் ஒருவனுடன் கர்மசேனன் சூதாட நேர்ந்தது. சூதாட்டத்தில் அனைத்தையும் தோற்ருன் கர்மசேன மன்னன். நாட்டை இழந்த மன்னன் மனைவி மக்களையும் இழந்து நயன ஒளிகெட, பசியால் வாடி, பரதேசியாகி, விந்தியமலைச் சாரலையடைந்தான். ஆண்டியான பிறகுதான் கர்மசேனனுக்கு ஆண்டவனிடத்தே பக்தியும், தான் செய்த பாபங்களைக் குறித்து சோகமும் ஏற்பட ஆரம்பித்தது.

ஒருநாள் இவன் பசியால் வாடியிருந்த சமயம், அந்தணர் ஒருவர் தோன்றி, இவனது விருத்தாந்தத்தை வினவி, அறிந்து கொண்டு, இவன் மீது இரக்கப்பட்டு, தன் கையிலிருந்த கட்டமுதை இவனுக்குக் கொடுத்து உண்ணும்படி சொன்ஞர். அதற்கவன், "சுவாமி! யான் முக்தியளிக்கும் மூவலூர் முக்கண்ணனை தெரிசித்த பின்னரே உண்பேன்" என்று உறுதியுடன் கூறினன். "நீர் முதலில் நான் கொடுக்கும் உணவை உண்ணும். பிறகு உம்மை நிச்சயமாய் நீர் விரும்பும் மூவலூருக்கு அழைத்துச் செல்லுகிறேன்" என வாக்களிக்கவே, அந்தகனும் அந்தணர் கொடுத்த உணவை அருந்தினன் பின்னர், அந்தணர், தன் கையிலிருந்த கோலை நீட்டி, அதைப் பிடித்துக்கொண்டு தன் பின் வருமாறு ஏவினர். இருவருமாக மூவலூரை நோக்கி பயணமாயினர். காடு மலைகளெல்லாம் கடந்து, காஞ்சிமாநகரிலுள்ள மிளகுவனத்தை அடைந்தனர்.

இவ்வனத்தில் ஆச்ரமமமைத்துக்கொண்டு வீரசேன என்ற துறவி ஒருவர் வசித்துவந்தார். இவருக்கு காரியசேனர் சந்திரசேனர் என்று இரண்டு சீடர்கள் பணிவிடை செய்துவ தனர். ஒருநாள் விடியற்காலை சந்திரசேனர், அருகாமைய லுள்ள ஓடையில் ஸ்நானம் செய்ய வரவே, அவ்வமயம் ஓ அந்தணர் அந்தகனொருவனுக்கு வழிகாட்டியாய் வருவதை கண்டார். சந்திரசேனர், அந்தணரை அணுகி "சுவாமி தாங்கள் இன்று எங்கள் ஆச்ரமத்தில் உணவு அருந்திவிட் ஓய்வு எடுத்துக்கொண்டு பின்னர் செல்லலாம்" என்ருர். அ கேட்ட மறையவர் "முனிவரே! கர்மசேனர் என்னும் இவ முக்தியளித்திடும் மூவலூர் மேவிய பிரானை தெரிசிக்கச் செ லுகிருர். இவருக்குத் துணையாக யானும் அங்கு போகிறேன் எம்பிரானை தெரிசிக்குமுன் எங்கும் தங்கமாட்டோம்"என்ருர் அம்மொழி கேட்டதும், சீடத்துறவி, "அந்தணரே! யானு என் குருநாதர் வீரசேனரும், சீடர் காரியசேனரும், பன்னெ நாட்களாய் அத்தலத்துச்குச் சென்று ஆண்டவனை தெரிசித்த வரவேணுமென்ற அவா உடையோராயுள்ளோம் எனினு சமயம் இதுவரை கிடைக்காதிருந்தது, சந்தர்ப்பத்தை நழுவ விடாது, அவர்களிடமும் இதைக்கூறி அவர்களையும் அழைத்த வருகிறேன், சற்று தாமதித்தல் வேண்டும்" என்று கூறி ஆ ரமத்துக்கு விரைவிற் சென்ருர். குருவிடமும் நண்பரிடமும் தெரிவித்து. அவர்களுடன் புறப்பட்டு அந்தணரிடம் வந்த சேர்ந்தனர். அந்தணர், கர்மசேனர், வீரசேனர், சந்திரசேனர் காரியசேனர் ஆகிய நால்வருக்கும் வழிகாட்டியாகவிருந்து வழித்துணைநாதன் வீற்றிருக்கும் மூவலூருக்கு அழைத்துச் செல்லலாயினர்.

ஐவரும் மூவலூர் வந்து சேர்ந்தனர், அந்தகனை அழைத்து வந்த அந்தணர் திடீரென மறைந்துவிட்டார். இப்படி மாயமாய் மறைந்த அந்தணர் கோலங்கொண்டவர், ஸ்ரீ மார்க்கசகாயேசுவரரைத் தவிற வேறு யாராக இருக்கமுடியும்? மூவலூர் தலத்தை மிதிக்கவே, கர்மசேனரின் கண்கள் மீண்டும் ஒளிபெற்றன. நால்வரும் காணும்படி ஆலயத்திலுள்ள சிவ

லிங்கத்தில், இடைக்குமேல், அந்தகரை அழைத்துவந்த அந்தணரின் வடிவம் தோன்றியது. உடனே கர்மசேனர், இறைவா! நின்னைக்கண்ட கண்களால் பிறவற்றைக் காணாத வரம்தருக" எனவேண்டவே, நால்வரையும் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டு, தானும் ஸ்ரீ மகாலிங்கத்துள் மறைந்தருளினார்.

கல்வெட்டுச் சாசனங்கள்.

இக்கோவிலில் கல்வெட்டுச் சாசனங்கள் சில உள. அவைகளில் பெரும்பான்மை தேய்ந்து மறைந்துபோய்விட்டன. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள பழைய கல்வெட்டு ஆராய்ச்சி இலாகாவினால் சில சாசனங்கள் இக்கோயிலினின்றும் பதிவெடுத்துக் காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் பெரிதும் இக்கோவிலுக்கு உபயம், கட்டளையாக விடப்பட்ட நிலம், நகை முதலியவைகளைப்பற்றியனவாம். ஆனால் சாசனங்களில் கண்டுள்ள யாவும் இப்பொழுது இக்கோயிலுக்கு உரியவைகளாயிருக்கின்றன என்று சொல்லுதற்கு இடமில்லை.

தலபுராணத்துக்கு ஆதாரமாக, சில கல்வெட்டுச் சிற்பங்கள் இக்கோவிலில் தென்படுகின்றன, சுவாமி கோவில் உட்பிரகாரத்தில், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சந்நிதிக்கு கீழ்ப்புரத்தே, ஸ்ரீ மகாலிங்கத்தை பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற மூவரும் பூஜிக்கும் நிலையில் கல்வெட்டுச் சிற்பம் அமைந்துள்ளது. அதே மாதிரி வெளிப்பிரகாரத்தில் அம்மன் மண்டப மேற்புரத்தில் ஒரு கல்வெட்டுச் சிற்பம் காணப்படுகிறது.

நித்திய பூஜைகளும் உற்சவங்களும்:-

நாடோறும் ஆகம விதிப்படி ஐந்துகால பூஜைகள் நடைபெறுகின்றன. பிர்மோற்சவம் பங்குனித் திங்களில் நடைபெறும். பிர்மோற்சவ பத்து நாட்களிலும் பஞ்சமூர்த்தி புறப்பாடுண்டு. அதில் ஐந்தாம் திருநாளன்று வெள்ளிரிஷபத்தில் வழித்துணை நாதர் அமர்ந்து காட்சியளிப்பது பார்க்கத்தக்கது. ஏழாந்திருநாளன்று திருக்கல்யாணம். அன்று புஷ்ப விமானத்தில் சுவாமி புறப்பாடு. ஒன்பதாம் திருநாளன்று

ரதோத்சவம். பத்தாம்திருநாளன்று வெள்ளி ரிஷபவாகனத்தில், சோமாஸ்கந்தர் பஞ்சமூர்த்தி கோலமாய் பொன்னி நதிக்கு எழுந்தருளி, பிப்பலர் தீர்த்தக்கட்டத்தில் தீர்த்தவாரி நிகழ்த்துவார். பதினோராம்நாள் மௌன உற்சவமும், பன்னிரெண்டாம்நாள் கௌரி உற்சவமும், பதின்மூன்றாம்நாள் சண்டிகேசுவரர் உற்சவமும் நடைபெறும். வருஷ ஏறுபடி தினங்கள் முழுவதிலும் சுவாமி புறப்பாடு நடைபெற்று வருகின்றன. மாதகிர்த்திகை, பிரதோஷ தினங்களில் பிரகாரத்துக்குள்ளாகவே சுவாமி புறப்பாடுண்டு.

நிர்வாகம்:-

1355-ம் பசலியில், சென்னை இந்துமத தர்ம பரிபாலன சபையோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும், நிர்வாகத் திட்டப் பிரகாரம் (Scheme of administration) போர்டாரவர்களால் நியமிக்கப்பட்டுள்ள நிர்வாக அதிகாரியாலும் (Executive Officer) கௌரவ தர்மகர்த்தாக்கள் மூவராலும், தேவஸ்தானத்திய நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது.

முடிவுரை;

ஒரு நாட்டின் கடவுள் பக்தியையும், மதப் பற்றையும், ஜீவகாருண்யத்தையும், வளப்பத்தையும் தெற்றென எடுத்துக் காட்டுவது அங்கு ஏற்பட்டிருக்கும் ஆலயங்களே தென்னாட்டில்புராதான ஆலயங்கள் பலஉள ஒருஆலயத்தின் மகிமையையும். அங்குகுடிகொண்டுள்ள எம்பிரானின் பெருமையையும் எடுத்துக் காட்ட தலபுராணம் இன்றியமையாதது. தலபுராணங்கள் கடவுள் பக்தியைஉறுதிப்படுத்துகின்றன. உடல் உறுதிபெற உணவு உண்கிறோம். அதுபோல தெய்வத்தினிடம் திட உறுதிகொள்ள, தெய்வ வழிபாடு செய்யவேண்டும். பொருளை உணர்ந்து கடவுளின் திருநாமங்களை உச்சரிப்பவருக்கும், சிந்திப்பவருக்கும் சிவமயமாதல் எளிது. இவ்வாறு சிந்தித்து உச்சரித்தல்தான் வழிபாடு அல்லது 'மந்திரம்' எனப்படுகிறது. மனதை உறுதிப்படுத்துவது எதுவோ அது மந்திரம்.

சிவவழிபாடு மேலான எண்ணத்தையும், சிவனது அருளையும் மனதுக்கு ஊட்டி மனிதனைப் புனிதனாக்குகிறது. அவனருளாலே அவன்றாள் வணங்காதவனது வாழ்க்கை பயனற்றதாய்ப்போய்விடுகிறது. நவீன நாகரீகமும், சுவையற்ற, மதச் சாரமில்லாத கல்வியும் பார்வைக்கு முன்னேற்ற முடையது போல்தோன்றும். உயரப்பறந்தாலும், கழுகின் நோக்கம் மண்ணில் கிடக்கும் அழுகிய பதார்த்தங்கள் மீதுதான்செல்லும். மண்ணிலே தோன்றினும், மல்லிகை, வானத்தை நோக்கி படர்வதுடன், இனிய கந்தமுள்ள மலர்களையும் புஷ்பிக்கிறது. அதேபோல் எளிய வாழ்க்கையை தெய்வத்துடன் இணைக்குங்கால் மணம் பெறுகிறது.

புதிதாய் ஒருவன் ஒரு ஊருக்குச் சென்றால், முதலில் பெட்டி பேழைகளை பத்திரப்படுத்தி வைக்க ஒரு விடுதியைத் தேடி ஏற்படுத்திக் கொண்டுதான், பின்னர், தான் வந்த காரியத்தை கவனிக்கிறான். அதேபோல், மனிதன் பரத்தைச்சார முதலில் வழியைத் தேடிக்கொண்டுதான் பிறகு இகத்துக்கு வேண்டிய சுகத்தை தேடிக்கொள்ள வேண்டும்.

சுபம்! சுபம்! சுபம்!

113189